**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.9/2021 - DW-1**

| | |
|---|---|
| Name | திரு.கிருஷ்ணமூர்த்தி (எ) குட்டி |
| Father Name | திரு.பொன்னுசாமி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **23.02.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

வாதியை எனக்கு சுமார் 40 வருடங்களாக தெரியும். வாதி தோல் வியாபாரம் செய்து வருகிறார். வாதி ஹோட்டல் நடத்தி வருவதாக கேள்விப்பட்டேன். நான் ஒப்பந்ததாரராக தொழில் செய்து வருகிறேன். நான் தி.மு.க அரசியல் கட்சியையும், வாதி அ.இ.அ.தி.மு.க அரசியல் கட்சியையும் சேர்ந்தவர்கள். வாதியும் தி.மு.க அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் எவ்வளவு தொகை வாதிக்கு கடன் கொடுத்தேன் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள கடன் பற்றிய விவரங்கள் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வாதிக்கு கடன் கொடுத்ததற்கு அவர் பாண்டு பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். அந்த பாண்டு பத்திரம் என் வழக்கறிஞரிடம் உள்ளது. அந்த பாண்டு பத்திரத்தை என் வழக்கறிஞர் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. 14.01.2019-ம் தேதி RTGS பரிவர்த்தனை மூலம் வாதிக்கு பணம் அனுப்பினேன். எவ்வளவு பணம் அனுப்பினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. 14.01.2019-ம் தேதி வாதிக்கு நான் பணம் அனுப்பியதற்கான வங்கி ஆவணம் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் என்னிடம் வட்டிக்கு பணம் கேட்பவர்களுக்கு கடனாக பணம் கொடுப்பேன். ஆனால் கடன் கொடுக்கும் நிறுவனம் நடத்தவில்லை. 14.01.2019-ம் தேதி நான் வாதிக்கு ரூ.5 லட்சம் கடனாக கொடுக்க ஒப்புக்கொண்டு அதற்கு ரூ.1லட்சத்தை வட்டிக்காக பிடித்தம் செய்துகொண்டு ரூ.4லட்சம் கொடுத்துள்ளேன் என்றால் 14.01.2019-ம் தேதி ரூ.4லட்சம் வங்கி கணக்கிலும், ரூ.1லட்சத்தை பணமாகவும் வாதிக்கு கொடுத்தேன். நான் வாதிக்கு ரூ.1 லட்சம் ரொக்கமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னிடம் வாங்கிய ரூ.5 லட்சம் கடனுக்கு வட்டி எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் ரூ.5 லட்சம் கடன் பெற்ற பிறகு வாதி என்னிடம் வேறு பணம் எதுவும் கடனாக கேட்கவில்லை. நான் என் மருமகன் சரவணன் (எ) சரவண குமார் என்பவரிமிருந்து பணம் வாங்கி வாதிக்கு

கொடுத்ததாக என்னுடைய பதில் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேன் என்றால் நான் என் மருமகனிடம் பணம் வாங்கி வாதிக்கு கொடுக்கவில்லை. என் மருமகனுக்கும், வாதியின் மகனுக்கும் தனிப்பட்ட முறையில் கொடுக்கல் வாங்கல் உள்ளது. வாதிக்கு என் மருமகனை தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.